## 8.59 பொதுப் பணிகள்–பேரூராட்சிகள் துறை–தமிழ்நாடு அமைச்சுப் பணி இளநிலை உதவியாளர், வரித்தண்டலர் நிலை 1, இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் மற்றும் தட்டச்சர் பணியிடங்களில் ஏற்படும் காலிப் பணியிடங்களில் 20 சதவிகிதத்திற்கு மிகாத பணியிடங்களில் பேரூராட்சிகளில் பணிபுரியும் தகுதி வாய்ந்த கீழ்நிலைப் பணியாளர்களை பணி மாற்றம் மூலம் நியமனம் செய்தல்–குறித்து

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009

**க.எண்.37790/பேரூ2/98–2.** நாள் 22.3.99

அனுப்புநர்

திருமதி எஸ் மாலதி,இ.ஆ.ப.,
அரசு செயலர்,

பெறுநர்

பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை 108
ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை 15
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநர், சென்னை 108
அனைத்து மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர்
மாநில கணக்காயர், சென்னை 18
மாநில கணக்காயர், சென்னை 35
செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,சென்னை 2

அய்யா,

பொருள் : பொதுப் பணிகள்–பேரூராட்சிகள் துறை–தமிழ்நாடு அமைச்சுப் பணி இளநிலை உதவியாளர், வரித்தண்டலர் நிலை 1, இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் மற்றும் தட்டச்சர் பணியிடங்களில் ஏற்படும் காலிப் பணியிடங்களில் 20 சதவிகிதத்திற்கு மிகாத பணியிடங்களில் பேரூராட்சிகளில் பணிபுரியும் தகுதி வாய்ந்த கீழ்நிலைப் பணியாளர்களை பணி மாற்றம் மூலம் நியமனம் செய்தல்–குறித்து

பார்வை : 1.அரசாணை (நிலை) எண் 150 ந.நி.ம.கு.வ.துறை நாள் 19.8.98
2.பேரூராட்சிகளின் இயக்குநரின் நேமுக எண் 21991/98/அ2 நாள் 17.11.98
3.தமிழ்நாடு மாநில துப்புரவு மேற்பார்வையாளர்கள் சங்க கடிதம் நாள் 24.11.93

அரசாணை (நிலை) எண் 150 ந.நி.ம.கு.வ.(பேரு2) துறை நாள் 19.8.98ல் சில நிபந்தனைகளுக்குட்பட்டு பேரூராட்சிகளில் உள்ள இளநிலை உதவியாளர், வரித்தண்டலர், இளநிலை உதவியாளர் (ம) தட்டச்சர் மற்றும் தட்டச்சர் ஆகிய பணியிடங்களில் ஏற்படும் காலிப் பணியிடங்களில் 20 சதவீதத்திற்கும் மிகாத பணியிடங்களில் பேரூராட்சிகளில் பதிவுரு எழுத்தர், அலுவலக உதவியாளர் போன்ற அனைத்து கீழ்நிலைப் பணியிடஙகளில் பணிபுரியும் தகுதி வாய்ந்த நபர்களுக்கு பணி மாறுதல் மூலம் நியமனம் செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2. பார்வை 2ல் காணும் நேர்முகக் கடிதத்தில் பேரூராட்சிகள் இயக்குநர் கடிதத்தில் மேற்படி அரசாணையைச் செயல்படுத்துவது குறித்து சில விளக்கங்களை கோரியுள்ளார். சில பேரூராட்சி பணியாளர் சங்கங்களும் இது குறித்து சில விளக்கங்களை வெளியிடக் கோரியுள்ளன. அவைகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளிக்கப்படுகிறது.

| | வினா | விடை |
|---|---|---|
| 1 | இந்த அரசாணை பேரூராட்சிகளில் பணிபுரியும் எந்தெந்தப் பணியாளர்களுக்கு பொருந்தும் | இந்த அரசாணை சம்பள ஏற்ற முறை (Regular scale of pay) சம்பளம் பெறும் பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர், துப்புரவு மேற்பார்வையாளர், துப்புரவு பணியாளர்கள், குடிநீர் திட்ட பணியாளர்கள், காவல்காரர் போன்ற அனைத்து கீழ்நிலைப் பணியிடங்களில் பணிபுரியும் முறையான பணியாளர்களுக்கு பொருந்தும் |
| 2 | மேற்படி அரசாணையின் பத்தி 4(4)ல் பணி மாறுதல் மூலம் நியமனம் செய்ய ஒதுக்கீடு செய்யப்படும் 20 சதவீதம் காலிப் பணியிடங்களில் முதன் முதலில் வேலை வாய்ப்பகங்கள் மூலம் நியமனம் செய்யப்படாத கீழ்நிலைப் பணியாளர் ஒருவரை நியமனம் செய்ய எந்த நிலையிலும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ள இந்த நிபந்தனை கருணை அடிப்படையில் (on compassionate grounds) நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்க பொருந்துமா ? | பொருந்தாது |
| 3 | மேற்படி ஆணையின் பத்தி 4(7)ல் மேற்கண்டவாறு நியமனங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஓர் ஆண்டு எழுத்து பணி பயிற்சி பெற வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நியமனக் குழுவால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களை தேர்வாணையம் அங்கீகரித்த பின்னரே இவர்களுக்கு பயிற்சி வழங்க ஏற்பாடு செய்யப்பட வேண்டியுள்ளது. ஆனால் பணியிடங்கள் பல்வேறு காரணங்களை முன்னிட்டு உடனுக்குடன் காலியேற்படும். ஏனவே ஓர் ஆண்டு பயிற்சி முடிந்த பின் தான் இவர்களை அரசு நிலையாக்கப்பட்ட நியமிக்கப்பட வேண்டுமா அல்லது பணியிடங்கள் காலி ஏற்படுவதற்கேற்ப அவ்வப்போது இவர்களை ஈர்த்துக் கொண்டு ஓர் ஆண்டு பயிற்சி முடிவடையும் வரை பழைய நிலையிலேயே ஊதியம் வழங்க ஓர் ஆண்டு பயிற்சி முடிந்த பின்பு இவர்களை முறையான நிர்ணயம் பெற்றவர்களாக அறிவிக்கலாமா ? | கல்வி மற்றும் பிற தகுதிகளைக் கொண்டுள்ள கீழ்நிலைப் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப் படுவதற்கு முன்பாகவே கூட அவர்களுக்கு பத்தி 4(10)ல் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைக் குட்பட்டு பயிற்சி அளிக்கலாம். பத்தி 4(15)ல் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனையின்படி தேர் வாணையத்தின் ஒப்புதல் இன்றி எந்த ஒரு நியமனமும் செய்யக்கூடாது |
| 4 | மேற்படி அரசாணையின் பத்தி 4(9)ன்படி எழுத்துப் பணிக்கு பயிற்சி அளிக்க கீழ்நிலைப் பணியில் பணிபுரிவோர் தேர்வு செய்யப்படும்போது முதுநிலை அடிப்படையிலேயே தேர்வு செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பேரூராட்சிகளைப் பொறுத்த வரை கீழ்நிலை பணியிடங்கள் என்பது துப்புரவு பணியாளர்களிலிருந்து பதிவறை எழுத்தர் வரை பல்வேறு ஊதிய விகிதங்களில் பல்வேறு பதவி பெயர்களில் பல்வேறு நிலைகளில் பணியிடங்களும் பணியாளர்களும் உள்ளனர். எனவே இவர்களுக்குள் முதுநிலை எவ்வாறு கணக்கிடப்பட வேண்டும் | முதுநிலையைக் கணக்கிடும்பொழுது பணியாளர்களை அவர்களது பணி நிலைக் கேற்ப வரிசைப்படுத்தி, அதன்படி முதுநிலை கணக்கிடப்பட வேண்டும். ஒரே ஊதிய விகிதம் உள்ள பல்வேறு பணியிடங்களைப் பொருத்தவரை அவர்கள் எந்த தேதியில் பணியில் சேர்ந்தார்களோ அந்த தேதியின் அடிப்படையிலேயே முதுநிலை கணக்கிடப்பட வேண்டும். |

தங்கள் நம்பிக்கையுள்ள,

ஒம்/–

அரசு செயலருக்காக